## சுருக்கம்

ஆணையம் – இரண்டாவது மாநில நிதி ஆணையம் – அமைக்கப்பட்டது – மாநகராட்சிகள், நகராட்சிகள், பேரூராட்சிகள் மற்றும் ஊராட்சிகள் ஆகியவற்றின் நிதி நிலையை ஆய்வு செய்தல் – ஆய்வு வரம்புகள் – அறிவிக்கை செய்யப்படுகிறது..

நிதித் (வருவாய் ஆதாரங்கள்) துறை

அரசாணை நிலை எண்.103

நாள்: 3–3–2000.
மாசி 20, பிரமாதி,
திருவள்ளுவர் ஆண்டு 2031.

படிக்கப்பட்டது:

அரசாணை நிலை எண்.518, நிதி (வருவாய் ஆதாரங்கள்) துறை, நாள் 1–12–1999.

– – –

**ஆணை:**

மேலே படிக்கப்பட்ட அரசாணையில் தலைவர் மற்றும் நான்கு உறுப்பினர்களைக் கொண்ட இரண்டாவது மாநில நிதி ஆணையம், மாநகராட்சிகள், நகராட்சிகள், பேரூராட்சிகள் மற்றும் ஊராட்சிகள் ஆகியவற்றின் நிதி நிலையை ஆய்வு செய்வதற்காக அமைக்கப்பட்டு ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. அரசு தற்போது இவ்வாணையத்தின் ஆய்வு வரம்புகள் குறித்த அறிவிக்கையை வெளியிடுகிறது.

2. இத்துடன் இணைக்கப்பட்ட ஆய்வு வரம்புகளைக் கொண்ட அறிவிக்கை, 2000–ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 3–ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் சிறப்பு வெளியீட்டில் வெளியிடப்படும்.

(ஆளுநரின் ஆணைப்படி)

பி.வி. ராஜாராமன்,
அரசு செயலாளர்.

பெறுநர்
பணி மேலாளர், அரசு மைய அச்சகம், சென்னை 600 079 (அறிவிக்கையை வெளியிடுவதற்காக)
அரசின் அனைத்துச் செயலாளர்கள், சென்னை 600 009.
தலைவர், இரண்டாவது மாநில நிதி ஆணையம், பனகல் கட்டிடம், எண்.1, ஜீனிஸ் சாலை, சைதாப்பேட்டை, சென்னை 600 015.

திரு. மா.வே. நாராயணசுவாமி, அரசு சாரா உறுப்பினர், இரண்டாவது மாநில நிதி ஆணையம், பனகல் கட்டிடம், எண்.1, ஜீனிஸ் சாலை, சைதாப்பேட்டை, சென்னை 600 015.
இயக்குநர், ஊரக வளர்ச்சித் துறை, சென்னை 600 015.
ஆணையர், நகராட்சி நிர்வாகத் துறை, சென்னை 600 005.
உறுப்பினர்–செயலர், இரண்டாவது மாநில நிதி ஆணையம், பனகல் கட்டிடம், எண்.1, ஜீனிஸ் சாலை, சைதாப்பேட்டை, சென்னை 600 015.
பேரூராட்சிகளின் ஆணையாளர், சென்னை 600 108.
ஆணையாளர், சென்னை, மதுரை, கோயம்புத்தூ ர், திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி மற்றும் சேலம் மாநகராட்சிகள்.
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்
அனைத்து மாவட்ட பேரூராட்சி அதிகாரிகள்.
அனைத்து வட்டார வளர்ச்சி அலுவலர்கள்/ஊராட்சி ஒன்றிய ஆணையாளர்கள்.
உள்ளாட்சி நிதித் தணிக்கை இயக்குநர், சென்னை 600 108.
அனைத்து துறைத் தலைவர்கள்.
ஆளுநர் அவர்களின் செயலாளர், ஆளுநர் மாளிகை, சென்னை 600 025.
முதலமைச்சரின் செயலாளர், சென்னை 600 009.
செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை 600 009.
உயர்நீதிமன்றப் பதிவாளர், சென்னை 600 104.
நிதித் (நி.கு–4) துறை, சென்னை 600 009.
இருப்புக் கோப்பு/உதிரி நகல்கள்.

/ ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

3.3.2000

பிரிவு அலுவலர்.

## இணைப்பு

## அறிவிக்கை

அரசியலமைப்பின் 243–I பிரிவைச் சேர்ந்த (1) பகுதியின் (a) உட்பகுதியிலும், 243–Y பிரிவைச் சேர்ந்த (1) பகுதியின் (a) உட்பகுதியிலும், தமிழ்நாடு 1994 ஆம் ஆண்டு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 198–ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவிலும், தமிழ்நாடு 1994 ஆம் ஆண்டு மாநில நிதி ஆணையம் (தலைவர், ஏனைய உறுப்பினர்கள் முதலியோர்) விதிகளைச் சேர்ந்த 6–ஆம் விதியிலும், 1919 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 4/1919) 162–A பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவிலும், 1920 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 5/1920) 124–B பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவிலும், 1971 ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 15/1971) 193–A பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவிலும், 1981 ஆம் ஆண்டு கோயம்புத்தூர் மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 25/1981) 193–A பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவிலும், 1994 ஆம் ஆண்டு திருச்சிராப்பள்ளி மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 27/1994) 8–ஆம் பிரிவிலும், 1994 ஆம் ஆண்டு திருநெல்வேலி மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 28/1994) 8–ஆம் பிரிவிலும், மற்றும்1994 ஆம் ஆண்டு சேலம் மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 29/1994) 8–ஆம் பிரிவிலும் வழங்கியுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் பின்வருமாறு ஆணையிடுகிறார்;–

2–12–1999–ஆம் நாளிட்ட தமிழ் நாடு அரசிதழின் சிறப்பு வெளியீட்டின் பாகம் II பிரிவு 1, பக்கம்–1ல் வெளியிடப்பட்ட 1–12–1999 ஆம் நாளிட்ட II (1) நிதி/ 112 (a)/99 ஆம் எண்ணுள்ள நிதித் துறை அறிவிக்கையில் அமைக்கப்பட்ட மாநில அரசின் இரண்டாவது மாநில நிதி ஆணையத்தின் தலைவர் மற்றும் ஏனைய உறுப்பினர்களின் கால அளவு, முறையே அவரவர் பதவிப் பொறுப்பேற்ற நாளிலிருந்து 31–10–2001 வரையில் இருக்கும்.

2. இவ்வாணையம், கிராம மற்றும் நகர்ப் பகுதி உள்ளாட்சி அமைப்புகளில்—அதாவது கிராம ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியக் குழுக்கள், மாவட்ட ஊராட்சிகள், மாநகராட்சிகள், நகராட்சிகள், பேரூராட்சிகள் ஆகியவற்றின்–நிதி நிலையை ஆராய்ந்து, பின்வருவன குறித்துப் பரிந்துரை செய்திடல் வேண்டும். அதாவது:–

(அ) (i) மாநில அரசு விதிக்கத்தக்க வரிகள், தீர்வைகள், சுங்கங்கள், கட்டணங்கள் ஆகியவற்றின் நிகர வருவாயினை மாநில அரசுக்கும் கூறப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளுக்கும் இடையே பகிர்தல்; மற்றும் இந்த வருவாயை கூறப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளுக்கிடையே சேரும் அவைகளின் பங்குத் தொகைகளை ஒதுக்கீடு செய்தல்;

(ii) கூறப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளுக்கு ஒதுக்கீடு செய்வதற்கோ அல்லது அவைகளே வைத்துக் கொள்ளத்தக்க வரிகள், தீர்வைகள், சுங்கங்கள், கட்டணங்கள் ஆகியவற்றை தீர்மானித்தல்;

(iii) மாநில அரசின் தொகு நிதியிலிருந்து உள்ளாட்சி அமைப்புகளுக்கு உதவி மானியங்கள்;

ஆகியவற்றிற்கு பின்பற்றப்பட வேண்டிய கோட்பாடுகள்.

(ஆ) அவைகளின் கடன் சுமை அளவு, கடன் கரைப்புத் திறன் முதலியவற்றையும் கருத்தில் கொண்டு, உள்ளாட்சி அமைப்புகளின் நிதி நிலையை மேம்படுத்தத் தேவையான நடவடிக்கைகள்.

3. உள்ளாட்சி அமைப்புகளின் நிதி நிலையை ஆராயும் தருவாயில் ஆணையம் ஒவ்வொரு உள்ளாட்சி அமைப்பின் நிதி நிலையையும் மார்ச் 31, 2000–ல் உள்ளவாறு மதிப்பீடு செய்ய வேண்டும்.

4. மாநில அரசின் நிதி ஆதாரங்கள், அவற்றிலிருந்து மாநில அரசு செய்தாக வேண்டிய செலவுகள், குறிப்பாக, உள்ளாட்சி அமைப்புகளின் சார்பாக கடன்களை திருப்பி செலுத்துவதை உள்ளடக்கி மாநில அரசின் கடன் கரைப்பு வகையில் மாநில அரசுக்கு ஆகும் செலவினம், மாநில அரசின் ஏற்கனவே பொறுப்பேற்றுள்ள செலவினங்கள் மற்றும் ஏனைய செலவு பொறுப்புகள், மாநில அரசின் மூலதனக் கணக்கின் மீதான கடமைகளின் தேவைக்கு வருவாய் கணக்கில் தேவையான உபரியினை கவனத்தில் கொண்டு தனது பரிந்துரைகளைச் செய்திட வேண்டும்.

5. ஆணையம் பின்வருவனவற்றையும் கருத்தில் கொள்ள வேண்டும்:–

(i) மாநில அரசு, மைய அரசு மற்றும் ஏனைய முகவரமைப்புகள் ஆகியவற்றிடமிருந்து உள்ளாட்சி அமைப்புகள் தற்போது பெற்று வரும் நிதி ஆதார பங்கீட்டு அளவு மற்றும் பிறவகை நிதி ஆதாரங்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகள் குறித்து பதினொன்றாம் நிதி ஆணையத்தின் பரிந்துரைகள் மற்றும் அதன் போதுமான தன்மை;

(ii) மூலதன முதலீட்டுக்காக உபரிநிதியை உருவாக்குவதன் தேவையைக் கருத்தில் கொண்டு, மூலதனச் சொத்துக்களை பராமரித்து வருவது உட்பட, வருவாய் இனச் செலவுகளை செய்வதற்கான உள்ளாட்சி அமைப்புகளின் நிதித்தேவை பற்றிய நிலைமை;

(iii) 1999–2000 ஆம் ஆண்டில் எய்தப்பட்ட வரி விதிப்பு அளவு மற்றும் வருவாயை அதற்கு மேலும் அதிகரிப்பதற்கான வாய்ப்புகள் ஆகியவற்றின் அடிப்படையில், 2002–ஆம் ஆண்டு ஏப்ரல் முதல் தேதியிலிருந்து தொடங்கி ஐந்தாண்டுகளில் உள்ளாட்சி அமைப்புகளின் நிதி ஆதாரங்கள்;

(iv) முதல் மாநில நிதி ஆணையத்தின் பரிந்துரைகள் செயல்படுத்தப்பட்டது குறித்த நிலை மற்றும் அதன்படி பெற்ற நிதி ஆதாரங்களை உள்ளாட்சி அமைப்புகள் பயன்படுத்திய விதம்;

(v) தொடரும் மற்றும் தொடரா இனச் செலவுகளில் பெரும்பங்கு வகிக்கும் முக்கியமான செலவினங்களைப் பொறுத்தவரையில் திறமையும் சிக்கனமும் வாய்ந்த சிறப்பான நிதி நிருவாகத்திற்கான வாய்ப்புகள்.

6. மாநில, மைய அரசுகள் மற்றும் ஏனைய முகவரமைப்புகளிடமிருந்து பெறப்பட்ட அல்லது திரட்டப்பட்ட நிதி ஆதாரங்களை உள்ளாட்சி அமைப்புகள் பயன்படுத்துவதில் தற்போது நடைமுறையில் உள்ள நிதிப் பொறுப்பினை ஆணையம் ஆய்வு செய்யவேண்டும் .

7. ஊரக உள்ளாட்சி அமைப்பாக அல்லது நகர்ப்பகுதி உள்ளாட்சி அமைப்பாக பல்வேறு உள்ளாட்சி அமைப்புகளை வகைப்பாடு செய்வது குறித்து தற்போதுள்ள கோட்பாடுகளில் மாறுதல் ஏதேனும் தேவைப்பட்டால், ஆணையம் அம்மாறுதல்கள் குறித்து ஆலோசனையளிக்கலாம்.

8. உள்ளாட்சி அமைப்புகளின் பணியிலிருந்து ஒய்வு பெற்ற பணியாளர்களுக்கு ஒய்வூதியம் வழங்கும் முறையில் மாற்றம் ஏதேனும் தேவைப்பட்டால், அது குறித்தும் ஆணையம் தக்க பரிந்துரைகள் செய்ய வேண்டும்.

9. மேலே 2 – 8 பத்திகளில் கண்ட ஆய்வு வரம்புகளோடு பிணைப்புள்ள வேறு பிற பொருள்கள் தொடர்பாகவும் ஆணையம் தக்க பரிந்துரைகளைச் செய்யலாம்.

10. 2002–ஆம் ஆண்டு ஏப்ரல் முதல் தேதியிலிருந்து தொடங்கும் ஐந்தாண்டுகளுக்கு பொருந்தும் வகையில் ஆணையம் தரவிருக்கும் அறிக்கையை 2001ம் ஆண்டு அக்டோபர் 31–ம் தேதிக்குள் அளித்திடல் வேண்டும்.

பிப்ரவரி 18, 2000
சென்னை.

ஒப்பம்.
(மீ. பாத்திமா பீவி)
தமிழக ஆளுநர்.

/ உண்மை நகல் /

பிரிவு அலுவலர். 3.3.2000